**செ.வெ.எண்: 531** **நாள்: 22.09.2021**

**புதுக்கோட்டை மாவட்டம்**

**ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பூவரசக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் கட்டடத்தினை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் இன்று (22.09.2021) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பூவரசக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் பூவரசக்குடியில் தேசிய வாழ்வாதார இயக்கத் திட்டத்தின்கீழ், ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள துணை சுகாதார நிலையக் கட்டடம், வல்லத்திராக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள செவிலியர் குடியிருப்புக் கட்டடம், பாலையூரில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக

கட்டப்படவுள்ள துணை சுகாதார நிலையக் கட்டடம் ஆகிய கட்டடங்களுக்கு பூமி பூஜை செய்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று வல்லத்திராக்கோட்டையில் ரூ.16.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய குடிநீர் அமைப்பும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பாச்சிக்கோட்டையில் கருப்பையா என்பவர் தன்னுடைய நிலத்தில் உள்ள தைல மரங்களை அகற்றி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பழ மரங்கள் நடவு செய்ததற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. மேலும் பெரியநாயகிபுரத்தில் புதுக்கோட்டை மகாராணி ரோட்டரி சங்கம் மற்றும் மரம் அறக்கட்டளை சார்பில் மரக்கன்றுகளும் நடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணம் செய்து வருகின்றனர். இதன் பயனாக ஏழை, எளிய மகளிர் மிகுந்த பயனடைந்துள்ளனர். கோவிட் தொற்று காலத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு கோவிட் நிவாரண உதவித்தொகை தலா ரூ.4,000 வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களின் ஏனைய கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், சுனையக்காட்டில் சுனையக்காடு முதல் ஆண்டவராயசமுத்திரம் வரை ரூ.31 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி, நற்பவளக்குடியில் ஸ்ரீ மெய்யர் அய்யனார் கோவில் முதல் வடவயல் வரை ரூ.31.2 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி, நாட்டுமங்களத்தில் ரூ.15.84 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி, சிலட்டூர் குன்னக்குரும்பியில் ரூ.14.21 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி ஆகிய பணிகளை பூமி பூஜை

செய்து துவக்கி வைத்தார். தாந்தாணி கருமேனிஓடையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் துவக்கி வைக்கி வைத்தும், குலமங்களம் வடக்கு பள்ளிகொண்டான் குடியிருப்பு சாலையை பார்வையிட்டும் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா.சத்தியமூர்த்தி, அறந்தாங்கி மாவட்டக் கல்வி அலுவலர் திராவிடச்செல்வன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.கலைவாணி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் உஷா செல்வம் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**